**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**O.S.No. 56/2019**

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 05 நாள் வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.முனியசாமி | தாலுகா | : |
| த/ பெயர்<br>க/ பெயர் | :<br>: | கிராமம் | : |
| வயது | : | தொழில் | : |

**பி.வா.சா.1**
நாள் : 05.11.2025
நேரம் : 12.00.PM

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியாவேன். பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆக எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

1)22.06.1982ல் தாவா 1 வது லக்க சொத்தை செல்லம்மாள் பதிவு கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.1**

2)16.11.1983ல் தாவா 2,3 லக்க சொத்தை செல்லம்மாள் பதிவு கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.2**

3)08.04.2000ல் தாவா சொத்துகளை செல்லம்மாள் தனது மகனான 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில் அசல் **பி.வா.சா.ஆ.3**

4)11.08.2003ல் தாவா சொத்துகளுக்கு 1ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் **பி.வா.சா.ஆ.4**

5)25.04.2008ல் தாவா 1,2 லக்க சொத்துகளை 1ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.5**

6)25.04.2008 ல் தாவா 3 வது லக்க சொத்துகளை 1 ம் பிரதிவாதியிடமிருந்து 3 ம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.6**

7)25.07.2008 ல் தாவா சொத்துகளுக்கு 2,3 பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் **பி.வா.சா.ஆ.7**

8)09.09.2019 ல் தாவா சொத்துகளுக்கு 2,3 பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்ட வீட்டு மனை சிட்டா சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.8**

9)தாவா 1,2 லக்க சொத்துகளில் இருந்த வீட்டிற்கு 3 ம் பிரதிவாதி செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் அசல் எண்ணம் 8 **பி.வா.சா.ஆ.9**

10)தாவா 1,2 லக்க சொத்துகளில் இருந்த வீட்டிற்கு 3 ம் பிரதிவாதி செலுத்திய மின் கட்டண ரசீதுகள் அசல் எண்ணம் 11 **பி.வா.சா.ஆ.10**

11)தாவா 1,2 லக்க சொத்துகளில் இருந்த வீட்டிற்கு 3 ம் பிரதிவாதி செலுத்திய குடிநீர் கட்டண ரசீதுகள் அசல் எண்ணம் 4 **பி.வா.சா.ஆ.11**

12)தாவா 3 வது லக்க சொத்தில் இருந்த வீட்டிற்கு 2 ம் பிரதிவாதி செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் அசல் எண்ணம் 8 **பி.வா.சா.ஆ.12**

13)10.09.2019 ல் தாவா 3 வது லக்க சொத்தில் 2 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பதிவு கிரைய பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.13**

14) 2,3 பிரதிவாதிகளுக்கு வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய 14.09.2019 ம் தேதியிட்ட நோட்டிஸ் அசல் **பி.வா.சா.ஆ.14**

**(பி.வா.சா.ஆ.3 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும் செல்லம்மாள் என்பவர் அதில் கையொப்பம் இடவில்லை என்றும் 1 ம் பிரதிவாதியால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது )**

(பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.15.PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.11.05 12:24:19 +0530